

# தலைவாசல்

Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 55 | thalaivaasaltv@gmail.com | வெள்ளிக்கிழமை நவம்பர் 27, 2020




# தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும்

# மாவீரர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி

















தமிழீழ விடுதலைக்காகப் போராடி உயிர் துறந்த 40 ஆயிரத்துக்கும் அதிகமான மாவீரர்களை நினைவு கூர்ந்து, உலகமெங்கும் வாழும் தமிழர்கள் இன்று சுடரேற்றி வணக்கம் செலுத்தினர்.

இன்று மாலை 6.06 மணியளவில், மாவீரர்கள் நினைவாக, ஒரு நிமிடம் மௌன வணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து, முதல் மாவீரன் லெப்.சங்கர் உயிர் துறந்த, மாலை 6.07 மணியளவில், உலகெங்கும் வாழும் தமிழர்கள், தமது இல்லங்களிலும், பொது இடங்களிலும், சுடர் ஏற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

தமிழர் தாயகத்தில் இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியிலும், வீடுகளில், தமிழ்மக்கள் மாவீரர்களுக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

அதேவேளை, இந்தியாவிலும், புலம்பெயர் நாடுகளிலும், ஒழுங்கமைக்கப்பட்ட இடங்களிலும் மாவீரர்நாள் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

வல்வெட்டித்துறையில், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மாவீரர்களுக்கு நினைவுச்சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தினார். அவரது அலுவலகத்தைச் சூழ படையினர், பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா தனது குடும்பத்தினருடன் இல்லத்தில் தீபம் ஏற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார். அதன்போது தமிழீழ மாவீரர் நாள் கீதமும் ஒலிபரப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் வரதராஜா பார்த்திபன் தனது இல்லத்திற்கு முன்னால் மாவீரர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

மாலை 6.07 மணிக்கு உயிரிழந்த உறவுகளுக்காக பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அக வணக்கம் செலுத்தப்பட்டு மலரஞ்சலியும் இடம்பெற்றது.

தமிழ் மக்களின் விடுதலைக்காக தம் உயிர்களைத் தியாகம் செய்த விடுதலை வீரர்கள் ஒவ்வொருவரும் எம் மக்களின் இதயங்களில் என்றும் வாழ்ந்துகொண்டு இருப்பர் என்று தனது இல்லத்தில் விடுதலை வீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய போது தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது அலுவலகத்தில் மாவீரர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கிளிநொச்சியில் அறிவகத்தில் மாவீரர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

## காரைநகரில் ஒருவருக்கும் கரைச்சியில் ஒருவருக்கும் கொரோனா தொற்று

யாழ்ப்பாணம் காரைநகரில் ஒருவருக்கும் கிளிநொச்சி கரைச்சியில் ஒருவருக்கும் கோரோனா தொற்று உள்ளமை இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் காரைநகரில் 40

03



## அஞ்சலி செலுத்த முற்பட்டதாக அருட்தந்தை கைது!

மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு தயாராகியதாக அருட்தந்தை ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்துக்கு

03

## தரணி எங்கும் தமிழராய் இணைவோம்

# பிரித்தானிய நாடாளுமன்றத்தின் கொத்தளங்களில் நினைவுகூரப்பட்ட மாவீரர்கள்!




மாவீரர்களை நினைவுகூரும் முகமாகப் பிரித்தானிய நாடாளுமன்றக் கொத்தளங்களில் கார்த்திகைப் பூ ஒளிவீச்சாகப் பாய்ச்சப்பட்டுள்ளது.

எந்தவொரு அமைப்பினதும் பின்புலம் இன்றி தன்னெழுச்சியுடன் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் சிலர் எடுத்த முயற்சியின் விளைவாகவே இச் சாதனை நிகழ்ந்தேறியுள்ளது.

அத்தோடு "இனவழிப்புப் புரிந்த சிறீலங்கா அரசை எதிர்கொண்டு விடுதலைக்காக களமாடி வீழ்ந்த மாவீரர்களை நினைவுகூருகின்றோம்" என்ற வாசகமும் கார்த்திகைப் பூவின் கீழ் பிரித்தானிய நாடாளுமன்றக் கொத்தளங்களில் ஒளிவீச்சாகப் பாய்ச்சப்பட்டுள்ளது.

# மின்குமிழ்கள் அணைத்து எண்ணை விளக்கில் இயங்கிய வலி கிழக்கு பிரதேச சபை



வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் அலுவலகம் இன்றைய தினம் மின்குமிழ்கள் அணைக்கப்பட்ட நிலையில் எண்ணை விளக்கில் இயங்கியது.

இது பற்றி தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவிக்கையில், இம் முறை இறந்தவர்களை பொது இடங்களில் நினைவில் கொள்வதை என்னையும் பிரதிவாதியாகக் கொள்ளப்பட்டு,

பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் வாயிலாக நீதிமன்றம் தடைசெய்துள்ளது. நீதிமன்றத் தீர்ப்பினை நான் மதிக்கின்றேன். அதனை மீறமுடியாது. மீறுவது சட்டப்படியான குற்றமாகவுள்ளது.

மேலும் தவிசாளரான எனக்கு எதிராக மாவீரர் தின பொதுக்கூட்டத்தினை ஏற்பாடு செய்துள்ளதாக புலனாய்வு அறிக்கையினைக் கொண்டு மல்லாகம் நீதிமன்றிலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இத் தீர்ப்பிலும் மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதுடன் அடுத்த தவணையில் பொலிசாரினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந் நிலையில் நினைவுகூறலை நீதிமன்றத்தீர்ப்பிற்புக்கும் அறிவுறுத்தலுக்கும் மதிப்பளித்து பொது இடத்தில் பிரதேச சபை உறுப்பினர்களுடன் வழமைபோன்று நான் மேற்கொள்ளவில்லை.

இதேவேளை எமது ஆட்சிப் பிரதேசத்தில் உள்ள 75 ஆயிரத்து 334 பிரஜைகளுக்கும் நான் முதற் பிரஜை என்ற வகையில் எனது அலுவலக அறையின் மின்குமிழ்களை அணைத்துவிட்டு எண்ணை விளக்கில் எனது அலுவலகக் கடமைகளை ஆற்றினேன்.

எமது கோப்பாய் பிரதேசத்தினைச் சேர்ந்த செந்தூரன் என்ற மாணவன் 5 ஆண்டுகளுக்கு முன் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தன்னை மாய்த்துக் கொண்டார்.

அவரது இழப்பினை மனம் ஏற்றுக் கொள்ளாதபோதும் உயிர்நீத்த நிலையில் அவரின் ஆன்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றேன் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# நாடாளுமன்றில் மாவீரர்களுக்கு அஞ்சலி

இலங்கை நாடாளுமன்றில் இன்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இன்று(27) நாடாளுமன்றில் உரையாற்றும் போது மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

"இந்த மண்ணுக்காக மரணித்த இன்று(27) நினைவு கூரப்படுகின்ற மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறேன்" எனத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

"காணி அபகரிப்பு இன்று பெரும் பிரச்சினையாகியுள்ளது. இதனால் தான் அன்று ஆயுதம் ஏந்தி போராடும் நிலை உருவானது. சரணலாயங்கள் அமைக்கவென கூறி காணிகள் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதேவேளை, எமது பகுதியில் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளானர். வாழ்வாதாரம் இழந்துள்ளனர். அவர்களுக்கு காப்புறுதி முறை உருவாக்கப்பட வேண்டும். கெடுபிடிகள் நீக்கப்பட வேண்டும்" என்றார்.

# மாவீரர் நாள் தமிழர் இல்லங்களில் உருக்கமாக நினைவுகூரப்பட்டது!

தமிழ் மக்களுக்கான உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்தவர்களை நினைவுகூரும் மாவீரர் நாளில் தமிழ் மக்கள் இல்லங்களில் விளக்கேற்றி உருக்கமாக அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

பொது இடங்களில் ஒன்றுகூடி நினைவுகூரலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ் மக்களின் இல்லங்களில் இன்று (வெள்ளிக்கிழமை) மாலை 06:07 மணிக்கு தீபங்கள் ஏந்தி நினைவுகூரப்பட்டுள்ளது.















# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## காரைநகரில்...

வயதுடைய ஒருவருக்கு கோரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பு வெள்ளவத்தையில் இருந்து கடந்த 21ஆம் திகதி காரைநகருக்கு வருகை தந்த அவரை 3 நாள்களுக்குப் பின்னரே கண்டறிந்து சுயதனிமைப்படுத்தப்பட்டார். சுகாதாரத் துறையினர் சுயதனிமைப்படுத்தலில் வைத்துக் கண்காணித்தனர். அவரது மாதிரிகள் பெறப்பட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவருக்கு கோரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் குடிதண்ணீர் போத்தல் விநியோகத்தில் ஈடுபடும் நிறுவனத்தின் வாகனச் சாரதிக்கு கோரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர் மேல் மாகாணத்துக்கு சென்று திரும்பிய நிலையில் கரைச்சியில் உள்ள அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டார். அவரது மாதிரிகள் பெறப்பட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவருக்கு கோரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 71 பேரிடம் இன்று மாதிரிகள் பெறப்பட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் முன்னெடுக்கப்பட்ட முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் இருவருக்கு மட்டும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது என்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## அஞ்சலி செலுத்த முற்பட்ட...

முன்பாக அவர் இன்று மாலை 5.50 மணியளவில் கைது செய்யப்பட்டார்.

இளவாலையைச் சேர்ந்த அருட்தந்தை பாஸ்கரனே இவ்வாறு யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் யாழ்ப்பாணம் சிறிய குருமட அதிபராவார்.

யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்துக்கு முன்பாக தீப்பந்தங்கள் அலங்கரித்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு தயாராகிய நிலையில் அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தார்.



# பளை – ஆனைவிழுந்தான் பகுதியில் சொகுசு பேருந்து விபத்து: 17 காயம்!

ஓமான் நாட்டிலிருந்து நாடு திரும்பிய 25 பயணிகளை யாழ்ப்பாணம் விடத்தல் பளை தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு ஏற்றிவந்த சொகுசு பேருந்து கட்டுப்பாட்டை இழந்து கிளிநொச்சி பளை - ஆனை விழுந்தான் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இன்று காலை 9.45 மணியளவில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

பேருந்து கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி நீர் விநியோக குழாய் மீது மோதி விபத்து இடம்பெற்றிருக்கின்றது. சம்பவத்தில் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்துள்ள 3 பேர் உடனடியாக அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருக்கின்றனர். ஏனையோர் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஓமான் நாட்டிலிருந்து நாடு திரும்பிய 254 பேர் தனிமைப்படுத்தலுக்காக விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு 11 பேருந்துகளில் அழைத்துவரப்பட்ட நிலையில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

## தினம் ஒரு ஆரோக்கிய தகவல்-8

### தேக நல வாழ்விற்கு குடிநீர்

எமது உடலில் 60%க்கு மேற்பட்ட பகுதி நீராகும். உடலில் நீர் பல தொழிற்பாடுகளை ஆற்றுகிறது.

நீரானது குருதியின் பிரதானமான கூறாக உள்ளது, உணவு சமிபாட்டிற்கு உதவுகிறது, உடல் வெப்பநிலையை சீராக பேணுகிறது, கழிவு வெளியேற்ற உதவுகிறது, மலசிக்கலைத் தவிர்க்க உதவுகிறது.

தாகத்தின் போது தூய குடிநீரையே பருகுங்கள். தாகத்திற்காக இனிப்பான குடிபானங்களை அருந்துவதால் மேலதிக சீனி, இரசாயன பதார்த்தங்களையும் உள்ளெடுப்பதால் உடலுக்கு தீங்காக அமையும்.

ஆகவே, உங்களுக்கு நாளாந்தம் தேவையான அளவு தூய குடிநீரை அருந்துவதனை உறுதிப்படுத்துங்கள்.

**வைத்திய கலாநிதி கோ. றஜீவ்**

# கொரோனோ மரணம் 99ஆக உயர்வு!

நாட்டில் மேலும் மூவர் கொரோனா வைரஸ் தொற்றினால் மரணித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்படி, கொழும்பைச் சேர்ந்த 87 வயதுடைய ஆண் ஒருவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளார்.

இவர், கொழும்பு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் இவரின் மரணத்துக்கான காரணம், பக்டீரியா தொற்று மற்றும் கொரோனா தொற்றுடன் நீண்டநாள் நுரையீரல் பாதிப்பு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பம்பலப்பிட்டியைச் சேர்ந்த 80 வயதுடைய ஆணொருவரும் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளார்.

இவர், கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டு கடந்த 25ஆம் திகதி முல்லேரியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவரது மரணத்திற்கான காரணம், அதிக இரத்த அழுத்தம், நிமோனியா மற்றும் கொரோனா தொற்றினால் ஏற்பட்ட மாரடைப்பு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பேலியகொட பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய பெண்ணொருவர் கடந்த 23ஆம் திகதி கொழும்பு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் உயிரிழந்துள்ளார்.

இவரது இறப்புக்கான காரணம் கொரோனா தொற்று காரணமாக ஏற்பட்ட அதிக இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் பக்கவாதம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொரோனா தொற்றினால் மரணித்தவர்களின் மொத்த எண்ணிக்கை 99ஆக அதிகரித்துள்ளது.



# எத்தியோப்பியாவில் சிக்கிய இலங்கையர்களை அழைத்துவர நடவடிக்கை!

எத்தியோப்பியாவில் யுத்த பகுதிகளில் சிக்கியிருந்த 38 இலங்கையர்கள் பாதுகாப்பான முறையில் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த 38 இலங்கையர்களும் ஐக்கிய நாடுகளின் உதவிகளுடன் மீட்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், மீட்கப்பட்ட இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

எத்தியோப்பியாவின் வடக்கு பிராந்தியத்தில் மூன்று வாரங்களாக இடம்பெற்ற மோதலில் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகம் தெரிவித்துள்ளது.

வடக்கு பிராந்தியத்தில் மத்திய அரசின் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் டைக்ரேயன் பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்பட்டது

இதனை அடுத்து எத்தியோப்பிய பிரதமர் அபி அகமது பிராந்திய அரசாங்கத்திற்கு எதிராக தாக்குதலைத் தொடங்கியதை அடுத்து நவம்பர் 4 முதல் கடும் மோதல் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியின் கீழ்
## பாதுகாப்பு மற்றும் தொழிநுட்ப அமைச்சுக்கள்!

பாதுகாப்பு மற்றும் தொழிநுட்ப அமைச்சுக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு இன்று (வியாழக்கிழமை) அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ரியர் அட்மிரல் சரத் வீரசேகர பொதுப் பாதுகாப்பு அமைச்சரவை அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச முன்னிலையில் இன்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

அத்துடன், அமைச்சர் சமல் ராஜபக்ச உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கரவெட்டி பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றம்

வடமராட்சி தெற்கு- மேற்கு (கரவெட்டி) பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 2 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

31 உறுப்பினர்களைக் கொண்ட வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்டது.

இன்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் 10 மணிக்கு சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம், தவிசாளர் தங்கவேலாயுதம் ஐங்கரனால் சபையில் முன்வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட பகிரங்க வாக்கெடுப்பில், வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 16 வாக்குகள் அளிக்கப்பட்டன. எதிராக 14 வாக்குகள் கிடைத்தன.

அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்களும் ஈ.பி.டி.பி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா 3 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும் என 16 உறுப்பினர்கள் ஆதரவு அளித்திருந்தனர்.

எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 7 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்ன் 7 உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் சபைக்கு சமூகமளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.